Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 3 | மட்டக்களப்பு | வைகாசி, ஆனி — 1971 | விலை 30 | இதழ் 5 - 6 |
| --- | --- | --- | --- | --- |

## மறைக்கல்வி நடுநிலையச் செய்திகள்

புதிதாக அமைக்கப்பட்ட திருமலை மட்டக்களப்பு மேற்றிராசன மறைக்கல்வி ஆணைக்குழுவின் முதற் கூட்டம் 18-3-71ல் நடைபெற்றது. அதிலுள்ள அங்கத்தவர் வருமாறு :— 1. அருட்திரு பாத்லெட் 2. அருட்திரு பிறக்சீட் சில்வா 3. அருட்திரு சாமிநாதன் 4. அருட்திரு ஒக்கஸ் 5. அருட்திரு வெபர் 6. மேற்றிராசன இளைஞர் கூட்டத்தலைவர் 7. சகோதரி மேபிள் A. C. 8. சகோதரி நற்றிவிற்றி F. M. M. 9. சகோதரர் மத்தியூ S. S. J. 10. திருவாளர் இராமலிங்கம் 11. திருவாளர் அரியநாயகம் 12. சிங்களம் சார்பாக ஒரு அங்கத்தவர்.

ஆணைக்குழு அங்கத்தவர் அனைவரும் ஏகமனதாக சகோதரி மேபிளை செயலாளராக தெரிந்துகொண்டார்கள்.

அதி. வண ஆண்டகை அவர்கள் அங்கத்தவர்களின் வேலையையும் பொறுப்புணர்ச்சியையும் பற்றி குறிப்பாகக் கூறினர். மேற்றிராசன மறைக்கல்வித் தலைவர், பாடசாலையில் சமயபாடம் கற்பித்தலில் இருக்கும் சில கஷ்டங்களை எடுத்துக்கூறினர்: 1. குறைவான மறைக்கல்வி வகுப்புகள் 2. ஆசிரியர் குறைவு 3. அதிகமான ஆசிரியர்க்கு புதுமுறையில் மறைக்கல்வி கற்பிக்கத் தெரியாமலிருத்தல் 4. போதியளவு பாடப்புத்தகங்கள் இல்லாமை.

*இக் கஷ்டங்களை நீக்கச் செய்யப்படுபவை:*

I. திண்டிவனத்தில் பயிற்சி பெற்ற போதகர்மார் பாடசாலைகளில் மறைக்கல்வி கற்பிக்க அதிபருடன் ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

II. கருத்தரங்குகள் மூலம் ஆசிரியருக்கு புதுமுறைகள் புகட்டப்படுகின்றன.

III. 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு மறைக்கல்வி கற்பிக்கும் முறை பற்றிய கருத்தரங்கு ஒன்று மட்டக்களப்பிலும், கல்முனையிலும் நடாத்தப்பட்டது.

IV. போயா வகுப்புப் பாடங்களையும் பாடசாலைப்பாடத்திட்டத்தையும் தொடர்புபடுத்தி, மறைக்கல்வி கற்பிக்க, பாடத்திட்டம் வகுக்கப்படுகின்றது.

இரண்டு மூன்று மாதங்களில் லூக்காஸ் சுவிசேஷம் அச்சிலிருந்து வெளியாகி எல்

(4ம் பக்கம் பார்க்கவும்)

**"திருச்சட்டத்தை அழிக்கவல்ல...... நிறைவேற்றவே வந்தேன்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

(துணை ஆயர்)

## 25. குழந்தைகளின் ஞானஸ்நானமும பெற்றேரும்.

ஞானஸ்நானம் பெறுதற்கு விசுவாசம் அவசியமென்று முன்பு கண்டோம். குழந்தைகள் புத்திவிபரம் அறியாதவர்கள் ஆகவே, அவர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்து, தாமாகவே விசுவசிக்க முடியாதவர்கள். எனினும் அவர்கட்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்படுகின்றது. இவ்வழக்கம் திருச்சபையின் ஆரம்ப காலத்திலிருந்தே தொடர்ந்து வருகின்றது. இதற்குக் காரணம் என்ன? ''ஒருவன் நீரினுலும் ஆவியினுலும் பிறந்தாலன்றி கடவுளுடைய அரசில் நுழைய முடியாது'' (அருள். 3.5) என்று ஆண்டவர் இயேசு கூறினார். இவ்வாக்கியம் குழந்தைகளுக்கும் பொருத்தமானதென்று திருச்சபை கருதி வந்துள்ளது அவர்கள் விசுவாச உச்சாரணம் செய்ய முடியாத நிலையில் இருந்தாலும், அவர்கட்குத் தாயாகிய திருச்சபையின் திடனை விசுவாசமுண்டு. இந்த விசுவாசத்தோடு தான் அவர்கள் ஞானஸ்நானம் பெறுகின்றனர். இந்த விசுவாசத்தைப் பெற்றேரும் ஞானப் பெற்றேரும் திருச்சபையின் பதிலாளிகளாக நின்று, அதன் பெயரால் அறிக்கையிடுகின்றனர். ''திருச்சபை ஒரே நேரத்தில் எல்லோரின் பொதுத் தாயாகவும், தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரின் தாயாகவும் விளங்குகின்றது'' என்று புனித அகுஸ்தீனுர் குறிப்பிடுகின்றுர் (நிருபம் 98, இ. 5).

ஞானஸ்நானத்தின் உண்மைக் கருத்தை நிறைவுபடுத்தும் பொருட்டு, பிள்ளைகள் எந்த விசுவாசத்தில் ஞானஸ்நானம் பெற்றுர்களோ அந்த விசுவாசத்திலேயே பின்பு பயிற்றப்படவேண்டும். இப்பயிற்சிக்கு அத்திவாரமாய் அமைவது அவர்கள் பெற்றுக்கொண்ட இந்த அருட்சாதனமே. அவர்கட்கு உரித்தான இந்தக் கிறிஸ்தவ பயிற்சிமூலம், இறைவன் கிறிஸ்துவில் வகுத்துள்ள மீட்புத் திட்டத்தை அவர்கள் படிப்படியாக அறிந்து, தாமாகவே விசுவசிக்கக் கூடியவர்களாவார்கள். இந் நிலையை அவர்கள் அடைதற்கு, அவர்கள் வயதுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற முறையில் பெற்றேரும் மற்றேரும் அவர்கட்கு மறைக்கல்வி ஊட்டவேண்டும்.

திருச்சபையில் வழங்கிவரும் ஒரு மிகப் பழைய முறைப்படி ஞானஸ்நானம் பெற விரும்பும் வளர்ந்த ஒருவருக்கு ஒரு ஞானத் தாயோ தகப்பனே நியமிக்கப்படவேண்டும். அவர் திருச்சபையின் ஒரு உறுப்பினராயிருக்க வேண்டும் நானஸ்நானம் பெறவிரும்புகிற வரைத் தகுந்த முறையில் தயார் செய்வதுடன், ஞானஸ்நானத் திருச்சடங்கின்போது ஞானஸ்நானம் பெற விரும்புகிறவரின் விசுவாசத்திற்குச் சான்றுபகர்வார். ஞானஸ்நானத்தின்பின் புதுக் கிறிஸ்தவர் விசுவாசத்தில் நிலைத்து நின்று உத்தம கிறிஸ்தவ வாழ்வு வாழ அவர் அவருக்குத் துணைபுரிவார். இத்தொண்டுகள் யாவையும் அவர் திருச்சபையின் பெயராலேயே செய்கின்றுர்.

குழந்தைகளுக்கு ஞானப்பெற்றேரை நியமிக்கும் வழக்கமும் இதுவரை திருச்சபையில் இருந்து வந்துள்ளது. ஆனுல், குழந்தைகளைப் பொறுத்தமட்டில், அவர்கள் பெற்றேருக்கும் அவர்களுக்கும் இடையில் இயல்பான தொடர்புண்டு. ஆகவே, அவர்களது ஞானஸ்நான விடயங்களில் ஞானப் பெற்றேரைப் பார்க்க பெற்றேருக்கே கூடிய பொறுப்புகளும், உரிமைகளும் உண்டென்று திருச்சபை இப்போது வற்புறுத்துகிறது. திருமறைக் கோட்பாடுகளை அறிந்து விசுவசிக்க முடியாத நிலையிலிருக்கும் சிறு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தால், அவர்கள் வயது வந்தபின் திருமறையைக் கையேற்று உத்தம கிறிஸ்தவ வாழ்வு வாழவேண்டும். அவ்வாறு வாழச் செய்யும் பெரிய பொறுப்பை ஏற்று நிறைவேற்ற வேண்டியவர்கள் முந்தமுந்த அவர்களது பெற்றேரே. அவர்கள் இல்லாத பட்சத்தில் அல்லது நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பத்தில் ம ்டுந்தான் இப்பொறுப்பு குழந்தைகளின் ஞானப் பெற்றேரைச் சார்ந்ததாகும்.

இதனிமித்தமே, தங்கள் பிள்ளைகளின் ஞானஸ்நானத் திருச்சடங்கில் பெற்றேர் (தந்தை மட்டுமன்று, **தாயும்**கூட) பங்கு

(9ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாழ்வளிக்கும் வழி நாமே!

திரு. வி. அற்புதராசா, கொழும்பு.

மாட்டுத் தொழுவத்தில் பிறந்த ஒளி கல்வாரி மலையில் சுடர் விட்டு ஒளிர்ந்தது. சிலுவை என்னும் அகல் விளக்கிலே யேசு என்னும் அன்பு ஒளி சுடர் விட்டு எரிந்தது. அன்று பெரிய வெள்ளி கதிரவன் மறைந்து கொண்டிருந்தான் கார் மேகம் சூழ்ந்து கொண்டிருந்தது. மண்ணுலகை காரிருளும் பேரமைதியும் சூழ்ந்திருந்தன. அக்காரிருளிலே சிலுவை என்னும் கலங்கரை விளக்கு மட்டும் ஒளி வீசிக் கொண்டிருந்தது. ஆணவச் செருக்கிலே வாழ்ந்து கொண்டிருந்த வையகம் சிலுவை என்னும் அவ்விளக்கை அணைக்க முயன்று கொண்டிருந்தது.

ஆனால் அணையப் போகும் தீபம் அதிகமாகச் சுடர் விடுவது போன்று யேசுவும் சிலுவையில் சுடர் வீசினார். நானே உலகின் ஒளி என்று கூறிய கிறிஸ்து உலகிற்கு ஒளியாய் நின்று உலகை மீட்டார். தன்னையே பலியாக்கித் தரணியைக் காத்தார். அவரது வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கத் தேடிய யூத குலம் அவர் மாண்டு ட்டார் என்று எண்ணி இறுமாப்புக் கொண்டது.

ஆனால் மாண்டவர் மீண்டார். மரித்தவர் உயிர்த்தார். அணையா விளக்காக, மறையாத சோதியாக உயிர்த்தெழுந்தார். கல்லறை திறந்திட காரிருள் மறைந்திட பேரொளியாக உயிர்த்தெழுந்தார், கிறிஸ்து. எனவே.... மலையில் மாண்ட மனித ஒளி கிறிஸ்து, மறுபடி மீண்ட தெய்வ ஒளி கிறிஸ்து, பாரில் வீசிய பரமன் ஒளி கிறிஸ்து, பாவம் போக்கும் மாண்பு ஒளி கிறிஸ்து, பாடுகள் ஏற்ற அன்பு ஒளி கிறிஸ்து, பரிவுடன் நம்மைச் சூழும் ஒளி கிறிஸ்து.

நானே நல்ல ஆயன். நல்லாயன் தன் ஆடுகளை அறிகின்றான். ஆடுகளும் அவனை அறிகின்றன. நல்லாயன் ஆடுகளுக்கு முன் நடக்க, ஆடுகள் அவனைப் பின் தொடர்கின்றன. என் ஆட்டுச்கிடையைச் சேராத வேறு அநேக ஆடுகளும் உண்டு அவைகளையும் நான் கூட்டிச் சேர்க்க வேண்டும். அத்தனை ஆடுகளையும் நானே முன்னின்று வழி நடத்திச் செல்கின்றேன்.

ஆண்டவர் அகிலத்திற்கு ஆயரானார். வழி தப்பித் திரியும் மனிதனுக்கு வழி காட்டியானார். நிலை தடுமாறி தலை கீழாகச் சென்று கொண்டிருக்கும் வையகத்தை வாழ வைக்கும் வள்ளலானார்.

கண்ணிருந்தும் குருடராய், காலிருந்தும் நொண்டியாய் வாழும் மனிதரை கரம் பிடித்து அழைத்துச் செல்லும் துணைவரானார். நானே வழி என்று கூறிய நல்லவர் நானிலத்திற்கு நன்மை செய்யும் வழிகாட்டியானார்.

இதோ ஆயனின்றி அலையும் இந்த ஆட்டைப் போன்று, அகிலமும் அலைகிறது. வழி தப்பித் திரியும் இந்த ஆட்டைப் போன்று, மனிதனும் வழி தப்பித் திரிகிறான். காணாது போன ஆட்டைப் போன்று மனிதனும் கடவுளைக் காணாது தனிமையில் தவிக்கிறான். ஆண்டவன் அன்பு கூர்ந்து மனிதனைக் கட்டி அணைத்தார். கட்டி அணைத்த கரங்களை தட்டிப் பறித்து, வெட்டி முறித்து விட்டு வெளியேறிவிட்டான் மனிதன். தந்தையை விட்டுப் பிரிந்த ஊதாரிப் பிள்ளையாகி விட்டான். பசியிலும் பட்டினியிலும், துன்பத்திலும், துயரிலும் வாடுகிறான், இன்றைய மனிதன். ஆனால் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற தனயனை, இன்று வருவான், நாளை வருவான் என்று காத்திருக்கிறார் கடவுள். காணாமல் போன ஆடுகளைத் தேடி அலையும் ஆயனைப் போன்று ஆண்டவனும் மனிதனைத் தேடி வருகிறான். மனிதனே ........

விளக்கின் ஒளியை அழகென்று எண்ணி ஏமாறும் விட்டில் போலானான். சிலந்தியின் வலைக்குள் விழுந்து சீரழியும் சிற்றெறும்பானான். கானல் நீரைக் கண்டு மயங்கும் மானைப் போலானான்.

கண்ணுக்குக் காட்சி தருவதெல்லாம் கருத்துக்கு மகிழ்ச்சியைத் தரும் என்று எண்ணி ஏமாந்து விட்டான். மின்னுவதெல்லாம் பொன்னாகலாம், வெழுத்ததெல்லாம் பலாகலாம், என்று நம்பி நாசமடைந்து விட்டான். புகை போல, புனலில் புலர்ந்தெழும் குமிழி போல, உலக இன்பம் இன்றிருந்து

(4ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மறைக்கல்வி......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லோருக்கும் வழங்கப்படும். போயாவில் மறைக் கல்வி கற்பிக்க முன்வருவோருக்கு விசேட பயிற்சிகளும், உதவிகளும் அளிக்கப்படும்

**கலந்துரையாடலில் வெளியானவை:**

1. பாடசாலையில் காணப்படும் குறைகள் கஷ்டங்கள் மறைக்கல்வித் திணைக்கழகத்தாரால் அதி. வண ஆண்டகை அவர்களுக்கு அறிவிக்கப்படவேண்டும்.

2. மறைக்கல்விப் பணிக்கு தேவையான பணம் பற்றி கலந்துரையாடப்பட்டு பலவித அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன.

3. மறைக்கல்விப் பரீட்சை முடிவுகள் பற்றி: 69ம் ஆண்டில் திறமையடைந்தோர்க்கு பரிசுகளும், 70ம் ஆண்டிற்கு தராதரப்பத்திரமும் (சேட்டிவிக்கேற்) வழங்குவதாக முடிவு செய்யப்பட்டது.

4. பாடசாலைகளின் சிங்கள மறைக்கல்வி நிலையை நோக்கினல், திரிகோணமலை திருப்தி. மட்டக்களப்பு மகாவித்தியாலயம் மிகத் திருப்தி. மைக்கல் கல்லூரி திருப்தி. ஆனல், சிசிலியா மகாவித்தியாலயம் மிகக் குறைவான நிலையில் காணப்படுவதாகக் கூறப்பட்டது.

5. ஒவ்வொரு பங்கிலும் விவிலிய நூல்களின் உண்மைகளை எடுத்துரைக்கவேண்டிய முறைகள் அதிபரால் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இது திருமலையிலும் மட்டக்களப்பிலும் நடைபெற்று வருகின்றன.

6. சமய உரைகள் வானொலி மூலம் அளிக்கப்படுகின்றன. எங்களிடம் மறைக் கல்வியில் மிகவும் திறமை வாய்ந்தவர்களும் வேறு வசதிகளும் இருந்தும், இப்பணியில் ஈடுபட பணப்பிரச்சனை தடையாக இருக்கிறது.

7. ஒவ்வொரு பங்கிலும் வசதிக்கேற்ப கட்புலன் அட்டைகள், படக்காட்சிகள், படங்கள், திருநாட்களுக்கு முன் கருத்துள்ள விவிலிய ஆராதனைகள், வில்லுப்பாட்டுகள் மறைக்கல்வித் திணைக்கழகத்தாரால் தெரியப்பட்ட நாடகங்கள் ஆகியவற்றை நடாத்த அதிபர் திட்டமிட்டிருக்கிறார்.

8. சமய சம்பந்தமான நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், ஆஸ்பத்திரி, மறியற்சாலை, வாசிகசாலைகள் முதலிய இடங்களுக்கு இலவசமாக அளிக்கப்படுகின்றன.

நகரப் பொது இடங்களில் பிரசுரங்கள் போடுதலும் நன்று. ★

## வாழ்வளிக்கும்......

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நாளை மறையும் என்று எண்ணாத மனிதன் இறைவனை மறந்து விட்டான். இன்னலில் அகப்பட்டுத் தத்தளிக்கின்றான். அலை கடலில் அகப்பட்ட துரும்பாகி விட்டான். ஆனல்....... இந்நிலை மாற, இன்ப ஒளி பிறக்க, நல்வழி திறக்க, நன்மைகள் நிறைய, மனிதன் கிறிஸ்துவைத் தேட வேண்டும். அவரது வழியிலே அடியெடுத்து நடக்க வேண்டும். இதோ கிறிஸ்துவின் குரல் மனிதனின் காதில் அலை மோதுகின்றது- ''என்னைப் பின் செல்ல விரும்புகிறவன் தன்னையே மறந்து தன் சிலுவையைச் சுமந்து என்னைப் பின் தொடரட்டும்.

வருந்திச் சுமை சுமப்போர் அனைவரும் என் அண்டை வாருங்கள். நான் உங்களைத் தேற்றுவேன். என் நுகம் இனிமையானது. என் சுமை இலகுவானது'' என்று கூறி இறைவன் மனிதனை அழைக்கிறார். நல் வழியில் நடத்த யேசு நம்மை அழைக்கிறார்.

ஆனல், இன்பத்தைத் தேடும் மனிதனுக்கு இல்வழியில் இடம் இல்லை. உலகப் பற்றுக் கொண்டு வாழும் உலுத்தர்களுக்கு உத்தமர் கிறிஸ்துவின் வழியில் இடம் இல்லை. அழிவுக்குச் செல்பவர்களுக்கு அகன்ற வழி காத்திருக்கின்றது. பாவத்தில் வாழ்பவர்களுக்கு பரந்த வழி திறந்திருக்கின்றது. ஆணவத்தில் வாழ்பவர்களுக்கு நாணமில்லா வழி அகன்று கிடக்கின்றது. நய வஞ்சகர்களுக்கு நரக வழி திறந்து கிடக்கின்றது.

கிறிஸ்துவின் வழியை நாடுபவர்களுக்கு நன்மை வழி இருக்கின்றது. அன்பு வழி நடப்பவர்களுக்கு அருள் வழி திறந்திருக்கிறது. பண்பு வழி செல்பவர்களுக்கு பரலோக வழி காத்திருக்கிறது. கிறிஸ்து அமைத்துச் செல்லும் வழி குன்றுகள் சூழ்ந்த வழி தான், கற்கள் நிறைந்த வழி தான், கரடு முரடான வழிதான். என்றாலும் அது நல்ல வழி, நன்மை தரும் வழி, வாழ்வளிக்கும் வழி, அதில் நடக்க விரும்பும் நாம், நல்லவர்களாக இருக்க வேண்டும். நம்மையே மறக்க வேண்டும். நம் இன்பங்களைத் துறக்க வேண்டும். பற்றுக்களை அறுக்க வேண்டும். பாசங்களை வெறுக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் வாழ்வு காண முடியும்; எம் உள்ளம் மகிழ்வு பெற முடியும்; நம் இல்லம் இன்பம் காண முடியும்; நம் நாடும், உலகமும் அமைதி காண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனம் நொந்தால்......?

சி. எ செல்வராசா
காவத்தை.

நகைச்சுவையில் திளைக்கின்றனர் நண்பர்கள்; திளைக்க வைக்கின்றேன் நான். எனக்கு நண்பர்கள் அளித்த பட்டம் நாகேஷ். ஆனால், என்னைப் புரிந்துகொள்ளாத றெஜினா, மணியிடம் கூறினாளாம்.... ''உவருக்கு மேல் வீடு பிழை'' என்று. அதையும் நகைச்சுவைப்பட்டியலில் சேர்த்து நகைக்கிறது நண்பர் திரள். ஆனால் என் நகைச்சுவைக்கு காரணம் றெஜீனாவுக்கு மட்டுமல்ல, எவருக்குமே புரியாத புதிர்! அந்தப் புதிரை எனக்கு கூறமாட்டீரா என்ற தோரணையில் பார்க்கிறார் பங்குக் குரு அமலதாசன். அவர் காதை கூர்மையாக்குகின்றார். நான் குரலைத் தூய்மையாக்குகிறேன். படிக்க நினைத்தேன்; பையில் பணமில்லை. உழைக்க நினைத்தேன்; உடலில் உரமில்லை. வாழ நினைத்தேன்; வழியே இல்லை. சாக நினைத்தேன்; தேவபயம் தடுத்தது, தடுமாறினேன், தவித்தேன். பள்ளிப்பருவத்திலேயே உணவின்றி உறங்கியிருக்கிறேன். பாயின்றி படுத்திருக்கிறேன். உடையின்றி அலைந்திருக்கிறேன். அன்னையின் அன்பை, தந்தையின் தயவை, உற்றாரின் உறவை இழந்து, பாரியாய் பரதேசியாய் வாழ்த்தேன். ஆனால், என்னை அனாதையாக அலையவிட்ட ஆண்டவன், விடாமுயற்சி என்ற ஊன்று கோலை தந்திருந்தார். பிச்சை எடுத்துப் படித்தேன்; பட்டதாரியானேன். பட்டம் பெற்ற பின் பட்டம் போல் பறக்க எண்ணினேன்; வறுமை என்ற வட்டம் சூழ்ந்தது என்னை. வாட்டத்தால் தாழ்ந்தது உள்ளம்.

அழுதேன்........ ஆம், வாலிபத்திலேயும் அழவேண்டுமா?.... வேதனையால் விரக்தி அடைந்த உள்ளத்தைத் தேற்றியது விடாமுயற்சி. எழுத்துலகில் புகுந்தேன்; அது புகலிடம் தரவில்லை. எழுதினேன் கதை, அனுப்பினேன் கட்டுரை, வடித்தேன் கவிதை. ஆனால், எங்கும் இந்தப் பரதேசிக்கு வரவேற்பில்லை. அனுப்பியது அனைத்தும் திரும்பி வந்தது தபாலில்!

ஆனால், விடாமுயற்சி என்னை விரட்டியது. தொடர்ந்து எழுதினேன்; எள்ளி நகைத்தது சமூகம். அது அள்ளி அணைக்கும் என்ற நம்பிக்கையில் எழுதினேன். வெற்றி கிட்டியது. ஆம்.... நான் ஓர் எழுத்தாளன், சிந்தனைச் சிற்பி, புகழ்மாலை சூடியது, சமூகமல்ல, சர்க்கார்! ஆம்........ வாழ்க்கைப் போர் தணிந்தது. ஆனால், இதயதாகம் தணிந்தபாடில்லை. திருமணம் — எதிர்காலம் என்னை வரவேற்றது.

சீதனப் பேயால் விரட்டப்பட்டு, வயதுக் கூலியால் எச்சரிக்கப்பட்டு, வாழ வழியின்றி, பட்டமரம் போல் விட்டத்தை நோக்கிய வண்ணம் கண்ணீர் விடும் கன்னியரை எனக்கு தெரியாதா.... என்ன? ஆம்....... யாராவது ஓர் ஏழைப் பெண்ணுக்கு, மாற்றுச் சேலை அறியாத மாதுவுக்கு வாழ்வு தர வேண்டுமென்று திடசங்கர்ப்பம் செய்தேன், தூய இதயத்துடன், நேர்மை உள்ளத்துடன்.

அன்று எனக்கு வந்த கடிதத்தை மீண்டும் படித்தேன்.

அண்ணா! ''உங்கள் கதையைத் தொடர்ந்து படித்து வருகிறேன். உங்கள் கதையால் கவரப்பட்ட மக்கள் பத்திரிகையை அதிகம் வாங்குகிறார்கள். பத்திரிகை விற்று என்னைக் காப்பாற்றும் அண்ணனுக்கு நல்ல வருமானம். இப்போது நாங்கள் அரைவயிறு உண்ணுகிறோம்.

தொடர்ந்து எழுதுங்கள், நன்றி அண்ணா!

ஏழைத் தங்கை
சாளி

படித்த பெண் போல் தோன்றியது. கிழித்தேன் கடிதத்தை, கிழிந்தது அவள் நினைவு! ஐயோ, கிழிந்த நினைவு ஏன் பொருந்தியது.?

அவளை சந்திப்பேன் என்று நினைக்கவில்லை. சந்தித்தேன், காரில் அல்ல, சேரியில். வீட்டில் அல்ல, வீடு என்று அவர்கள் கூறும் குடிசையில். அழகு என்றால் என்ன? இருக்க வேண்டிய உறுப்பு இருக்க வேண்டிய இடத்தில் இருக்கவேண்டிய அளவுடன் இருப்பது தானே அழகு! அவளில் குறை காண முயன்றேன், முடியவில்லை

(12ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்றோர் மன்றம்

## பிள்ளைகளுக்கு மறைக்கல்வி ஊட்டுவதில் பெற்றோரின் பங்கு

(துணை ஆயர் அதிவந். தியோகுப்பிள்ளை ஆண்டகை)

**பெற்றோரின் உரிமையும் கடமையும்:**

மனித மாண்பு அறிவை வளர்த்தலாகும். ஒருவன் வாழ்க்கைக்குத் தன்னை ஆயத்தப்படுத்தவேண்டி இருப்பதனால் தான் அவன் கல்வி கற்கவேண்டி இருக்கிறது. இவ்வுலகில் ஒருகுழந்தை தோன்றுவதற்குப் பெற்றோரே காரணராக இருக்கின்றனர். ஆகவே, அக்குழந்தைக்குக் கல்வி ஊட்டும் இயற்கை உரிமையும் தலையான கடமையும் பெற்றோரைச் சார்ந்ததாகும். இவ்வுலகில், அவர்களே குழந்தையின் முதன்மையான முக்கிய ஆசிரியர்களாவர். சிறப்பாக மறைக்கல்வியின் மாபெரும் பொறுப்புப் பெற்றோரைச் சார்ந்ததென்பது உண்மையும் உறுதியுமானதாகும்.

இன்றைய ஞானஸ்நானச் சடங்குமுறை, ஞானப்பெற்றோரிலும் பார்க்கக் குழந்தையின் தாய் தந்தையருக்கே முக்கிய பொறுப்பு உண்டு என்பதை உணர்த்துகிறது. இத்தனை காலமும் பெற்றோர், குழந்தைகளின் ஞானக் கடமைகளை குருக்கள், பாடசாலை ஆசிரியர்கள், கன்னியர்கள் ஆகிய சமயத் தொண்டர்களில் சுமத்தி வந்தார்கள். இதனால் பெற்றோர் தமது பொறுப்பின் பெரும்பகுதியைக் குறைத்துக் கொண்டார்களே அன்றிச் குழந்தைகளுடன் ஒன்றுசேர்ந்து மறைக்கல்வி வித்தை விதைத்து, அவர்கள் பெற்று மகிழும் தெய்வீக அருளின் இன்பத்தைத் துய்த்து, மகிழ்ந்தார்கள் இல்லை. ஆன்மநலத்திற்கல்ல, உடல் நலத்திற்கே பெற்றோராக இருக்கிறோமென எண்ணி வாழும் பெற்றோருக்கு இன்றைய ஞானஸ்நான ஒழுங்கு விழிப்புணர்ச்சியைக் கொடுக்கிறது; அக்கறையையும், ஊக்கத்தையும் ஆக்குவிக்கிறது. இன்று குழந்தையின் ஞானஸ்நானத்தின் போது தாய் தகப்பன் கட்டாயம் சமுகம் அளிக்கவேண்டும். ஞானஸ்நானத்தினால் கடவுளின் குழந்தையாகப் புது உயிர்பெறும் தம் பிள்ளையின் விலையில்லா மதிப்பையும், இத் தேவதிரவிய அனுமானத்தின் கொடையையும் உணர்ந்தாற்றான் அவர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யமுடியும்.

**மறைக்கல்வியின் நோக்கம் என்ன?**

பிள்ளைகளிடம் விசுவாசக் கொடையை உணரவைத்தல், பிள்ளைகளைத் தூய ஆவியின் ஒளியில் செயலாற்றச் செய்தல். அவர்களை உண்மையிலும் நீதியிலும் வளர்த்தல். அவர்கள் தம்மைப் புனிதப்படுத்தவும், கிறீஸ்துவுக்குச் சான்று பகரவுஞ் செய்தல் முதலியன. பொதுவாகக் கூறின், ஞானஸ்நானத்தினால் பிள்ளைகள் பெற்ற விசுவாசத்திற்குத் நக்கபடி கடவுளை அறியவும் வழிபடவும், பிறருக்கு அன்பு செய்யவும், வாழ்வைப் புனிதப்படுத்தவும் பயிற்றலாகும்

கல்வி தனிப்பட்டதல்ல, பொதுவானது; எல்லா இடத்திலும் கற்றுக்கொள்ளலாம். ஆயினும், அடிப்படைப் பயிற்சியைக் குருவும் பெற்றோரும் பயிற்றுதல் வேண்டும். குழந்தைகள், சிறுவர்கள், குமரர்கள், இளைஞர்கள், ஆகிய யாவருக்கும் மறைக்கல்வி ஊட்டப் பெற்றோர் தம்மைத் தகைமை உடையவர்களாக்கிக் கொள்ளல் அவசியம். புதிய கருத்துக்கள், பிரச்சினைகள், புதிய வினாக்கள் தோன்றும்போதெல்லாம் பெற்றோர் அறிவு கொடுத்து, அறியாமையைத் தீர்க்கவேண்டும். மனக்கிலேசம், அங்கலாய்ப்புகளை அகற்றி உண்மையான, உறுதியான, கருத்துக்களை அவர்களிடம் அழுத்தித் தெளிவாக்க வேண்டும். புதிய நல்ல விஷயங்களை அவர்கள் கண்டு அறிந்து, சரிவர ஒழுக அவர்களுக்கு வழி திறக்கவேண்டும்.

பிள்ளைகள் தம் அழைத்தலைத் தெரியும் காலம்வரை தாய் தந்தையர் நாளும் பொழு

[7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பெற்றோர் மன்றம்...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

தும் அயராது அவர்களில் கண்ணோட்டம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு பிள்ளையின் அறிவாற்றல், இயல்பூக்கம், செயற்திறன் களைக் கண்டறிந்து படிப்படியாக நல்ல முறையில் வளர்த்து, துறவறத்திற்கோ, இல்லறத்திற்கோ தகுதியுடையவர்களாக்க வேண்டும். பெற்றோர் கொடுக்கும் அறிவுப் பயிற்சிதான் அவர்கள் தம் வாழ்க்கையைத் திறம்பட நடத்த அத்திவாரமான உதவியாக இருக்கும்.

**மறைக்கல்வி ஊட்டும் முறை.**

மறைக்கல்வி ஊட்டும் முறையில், பெற்றோர் தம் சொல்லாலும், முன்மாதிரியாலும் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். கிறீஸ்தவஉருவாக்கலில் தந்தைக்குரிய விசேஷ பங்கென்ன? தாய்க்குரிய விசேடபங்கென்ன? என்பதை அவர்கள் அறிந்து செயல்பட வேண்டும். பெற்றோர் வீட்டுச் சூழ்நிலையைத் தகுந்தவாறு அமைத்தால் அச்சூழ்நிலையில் நாளாந்த இயக்கம் இலகுவாகும். மறைக்கல்விக்கான பல்வேறு உதவிகள் கிடைக்கின்றன. திருமணத் திருவருட் சாதனத்தின் விசேடஅருள், இறைவழிபாட்டுச் சடங்குகள், சிறப்பாகத் திவ்விய பூசைப்பலி, ஞானவாழ்வுக்கு உதவிதருகின்றன. ஒருவர் ஓர் அந்தஸ்துக்கு அழைக்கப்படும்போது, அவருக்கு வேண்டிய வரமும் அறிவுணர்ச்சியும் கொடுக்கப்படும்; இறைவனில் நம்பிக்கைகொண்டிருந்தால் சகலவித உதவிகளும் வரப்பெறும். இறைவனுக்கும் உலகத்திற்கும் உகந்தவிதம் நடக்க அருள் கிடைக்கும்.

பாடசாலைகளில் அல்லது பங்குகளில் அளிக்கப்படும் மறைக்கல்விக்கு பக்திச்சபைகள், கிறீஸ்தவ மன்றங்கள், அப்போஸ்தல பணிக்குழுக்கள் என்பன ஈடில்லா உதவிகளை உதவி நிற்கின்றன. அவற்றை ஏற்றமுறையில் அணுகிப் பலனடையப் பெற்றோர் கூடிய அக்கறை கொள்ளவேண்டும். பிள்ளைகளை அவற்றில் பங்குபற்றிப் பலனடைய வழிசெய்தல் வேண்டும்.

**பாடசாலைகளும் மறைக்கல்வியும்.**

பாடசாலையைப் பொறுத்தவரையில் இன்றைய நிலைமை மிகக் கஷ்டமானது. சமய பாடநேரம் மிகக்குறைவு. சமயசுதந்திரம் இழிந்த நிலையில் உள்ளது. சமயஅறிவு ஊட்டத் தேவையான ஆசிரியர்கள் இல்லை. அறிவு புகட்ட மாத்திரமல்ல, வாழ்க்கையைப் பயிற்றவும் ஏற்ற சந்தர்ப்பம் இல்லை. இக்கட்டான இந்நேரத்தில், மக்களுக்கு மறைக்கல்வியில் பூரண வளர்ச்சியைக் கொடுக்கப் பெற்றோரே முன்வரவேண்டும். ஆசிரியர்களுடன் அடிக்கடி கலந்துரையாடி அவர்கள் நல்ல ஆலோசனைகளைப் பெறவேண்டும். பாடசாலையில் பிள்ளையின் மறைக்கல்வியின் தரத்தை ஆராய்ந்து, ஏற்றமுறையில் அவர்கள் அறிவும் உணர்ச்சியும் பெற பெற்றோர் வாய்ப்பான முறைகளைக் கையாளவேண்டும். இவ்விதம் அவர்கள் மறைக்கல்வியை வளர்ப்பார்களாகில், பாடசாலையில் சகல பாடங்களிலும் மறைக்கல்வித் தொடர்பை ஏற்படுத்தி இறை அன்பிலும் பிறர் அன்பிலும் அவர்கள் இரண்டறக்கலந்து வளரமுடியும்.

பிள்ளைகளின் ஞானவளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும் பாடசாலைகளின் தரம் குறைந்து வருவதால் திருச்சபையின் பல்வேறு நிறுவனங்களின் முயற்சிகளுக்கு ஆதரவளித்து அவைகளோடு ஒத்துழைக்க வேண்டும். குருக்களுடன் இளைஞரும். பெற்றோரும் ஒன்று சேர்ந்து புதுப்புது ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டும். பெற்றோர் சங்கம் எழும்ப வேண்டும். கிறீஸ்தவ மறைக்கல்விச்சபை ஒவ்வொரு பங்கிலும் நிறுவி நடத்த உதவி அளிக்கவேண்டும். ★


**2ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் எதிரொலி.**

(இலங்கையின் 2வது மறைமாநில சங்கத்தின் ஏடுகளையும் சட்டங்களையும் அடக்கியுள்ள நூல்)

இலங்கைக் கத்தோலிக்கர் எல்லோரும் படித்துப் பயன்படுத்த வேண்டிய நூல். சிறந்த பதிப்பு. பெற்றுக்கொள்ள முந்துங்கள்.

விலை: ரூ. 3.25
அஞ்சல் செலவு: 75 சதம்

கிடைக்குமிடம் :-

திருமறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம்,
மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## கிறிஸ்தவ போதக வழிகாட்டி

பாடம் 7: அன்பே கடவுள்.

இப்பாடம் கத்தோலிக்க திருமறை விளக்கத்தின் 14வது பாடமாகும்.

**சிந்தித்துப்பார் (விடைகள்):**

1. கடவுள் தமது அன்பை எவ்விதம் நமக்குக் காட்டுகிறார் என்றால், தம்முடைய ஒரே மகனால் நாம் சீவிக்கும்படி அவரை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். கடவுள் நம்மை நித்திய காலத்திலிருந்தே நேசித்திருக்கிறார். அன்பினாலே அவர் நம்மை உண்டாக்கி இருக்கிறார். தமது திருமகன் வழியாக நம்மை மீட்டார்; தம்முடைய பிள்ளைகளாக்கினார். அன்பினால் அவர் நம்மை எச்சரிக்கிறார். தண்டிக்கிறார், மன்னிக்கிறார்.

2. கடவுளின் அன்புக்கு நாமும் பிரதி அன்பு காட்டவேண்டும், நாம் அவரைத் தந்தை என்று அழைக்கவேண்டும். பிள்ளைகளுக்குரிய நம்பிக்கையுடன் அவர்மேல் உறுதியாய் இருக்கவேண்டும். சிறுவர்களைப் போல் நாம் அவருக்கு அன்பு செய்ய வேண்டும்.

3. கடவுளின் அன்பு பரிசுத்தர்களின் உள்ளத்தை கொள்ளை கொண்டது. கடவுள் ஒருவரைத் தவிர வேறு எந்தப் பொருளும் தங்கள் இருதய தாகத்தை தீர்க்க முடியாதென்று எண்ணினார்கள். கடவுளுக்கு மிகமிக அன்பு செலுத்துவதையே அன்றி வேறு ஒன்றையும் அவர்கள் ஆசிக்கவில்லை.

**பயிற்சிகள் :**

("ஆ" பகுதியிலுள்ளவைகளுக்குப் பொருத்தமான இலக்கங்கள் இடுக)

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. அன்பில் நிலைத்திருப்பவன் | [ ] எச்சரிக்கை செய்கிறார். |
| 2. கடவுள் அன்பினால் தம்முடைய | [ ] நாம் அவரின் பிள்ளைகள். |
| 3. கடவுள் எம்மைத் தண்டிப்பதும் | [ ] ஒரேமகனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். |
| 4. கடவுள் நம் தந்தை | [ ] அன்பினால்தான். |
| 5. கடவுள் அன்பினால்தான் நம்மை | [ ] சருவேசுரனிடத்தில் நிலைத்திருக்கிறான். |

அலகு 2:-உலகப்படைப்பு,மனிதனின் வீழ்ச்சி.

பாடம் 8: கடவுள் உலகைப் படைத்தார்.

இப்பாடம் கத்தோலிக்க திருமறை விளக்கம் என்ற நூலின் 16ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. உலகம் எப்பொழுதும் இருக்கவில்லை· அவர் வாக்கிடவே எல்லாம் உண்டாக்கப்பட்டது. தமது திருச்சித்தத்தின் சுயவல்லமையால் எல்லாவற்றையும் உண்டாக்கினார் என்பது பொருள்.

2. ஏனென்றால் உலகம் இல்லாமலே அவர் அளவற்ற பூரண பேரின்பத்தில் வாழ்ந்தார்.

3. கடவுள் தமது அணைகடந்த நன்மைத் தனத்தை வெளிப்படுத்தவும், அந்த நன்மைத் தனத்தை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கவும் உலகை உண்டாக்கினார்.

4. கடவுளின் நன்மைத்தனத்தில் பங்கு கொள்ளுமாறு படைக்கப்பட்ட உலகும், அதில் பகுத்தறிவுள்ள மனிதரும் படைப்பின்

(9ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இறைவழிபாட்டுச்......

[2ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளவேண்டுமென்று திருச்சபை இப்போது வற்புறுத்துகிறது. குழந்தைகளின் ஞானஸ்நானத்திற்குரிய புதிய ஒழுங்கு முறையில் தாய் தந்தையருக்குச் சிறப்பான தொண்டுகள் அளிக்கப்பட்டுள்ளன. ஞானஸ்நானம் கொடுக்கும் குரு அல்லது திருத்தொண்டர் அவர்கட்குக் கூறும் சிறப்பான அறிவுரைகளைக் கேட்டு, அங்கு சமுகமாயிருப்பவர்களுடன் சேர்ந்து பொதுச் செபங்களில் பங்குபற்றிய பின், பெற்றோர் பின்வரும் சிறப்பான தொண்டுகளைச் செய்கின்றனர்:

அ. தங்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி பிரசித்தமாய்க் கேட்கின்றனர்.

ஆ. ஞானஸ்நானம் கொடுப்பவரைத் தொடர்ந்து, குழந்தையின் நெற்றியில் சிலுவை அடையாளம் வரைகின்றனர்.

இ. குழந்தையின் பேரால் சாத்தானை வெறுத்துத் தள்ளிவிட்டு, விசுவாச அறிக்கை செய்கின்றனர்.

ஈ. அவர்கள் (விசேஷமாகத் தாய்) குழந்தையை ஞானஸ்நானத் தொட்டிக்குக் கொண்டு சென்று ஞானஸ்நானத்தின் போது தாங்கிப் பிடிக்கின்றனர்.

உ. எரியும் திரியை அவர்கள் கையில் பிடிக்கின்றனர்.

ஊ. தாய் தந்தையருக்குரிய விசேஷ ஆசீரைப் பெறுகின்றனர்.

ஆகவே, ஒரு குழந்தை பிறந்தபின் அதன் சுக நிலையைக் கவனித்து, அதன் தாயும் பங்குபற்றக் கூடிய காலத்திலேயே பொதுவாகக் குழந்தையின் ஞானஸ்நானத் திருச்சடங்கு நடைபெற வேண்டும். சுகக் குறைவுள்ள குழந்தைகளுக்கு கூடிய விரைவில் ஞானஸ்நானம் கொடுக்கலாம்,

குழந்தைகள் வயதிலும் அறிவிலும் வளர்ந்து வரும்போது அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது அவர்கள் பெற்றோர், தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பிற்கிணங்க, அன்புத் தந்தையாகிய இறைவனை அவர்கட்குப் படிப்படியாக அறிமுகப்படுத்தி, திவ்விய நற்கருணையில் பக்தியுடன் பங்குபற்றவும் அவர்களைத் தயார் செய்யவேண்டும்.

## மாணவர் மன்றம்............

(8ம் பக்கத் தொடர்ச்சி)

நலனை உணர்ந்து, அவரை நேசித்து, சேவித்து மகிமைப்படுத்தும்படியே.

5. கடவுள் தம் அளவற்ற ஆற்றல், ஞானம், நன்மைத்தனத்தினால் படைப்பில் இடையறாது ஈடுபட்டு, உலகின் ஓட்டத்தையும் மக்கள் வரலாற்றையும் வரையறுத்து, திட்டம் செய்து, இவையாவும் நித்திய கதியை பிறழாது சேரும்படி உலகை ஆண்டு வருகிறார்.

6. ஒவ்வொன்றும் கடவுளின் ஆதீனத்தில் அடங்கி அவரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதால், இவையாவும் அவருக்கே சொந்தம் எனக் கொள்ளல் வேண்டும்.

பயிற்சிகள்:

**கீறிட்ட இடங்களில் ஏற்ற சொல் வைத்து நிரப்புக.**

1. உலகம்............................................................ உண்டாயிற்று.
2. முதலில் கடவுள் வானத்தையும்................ ............................... படைத்தார்.
3. கடவுளின்.......................................எல்லாம் படைக்கப்பட்டது.
4. கடவுள் தமது அணைகடந்த........................... வெளிப்படுத்த உலகை உண்டாக்கினார்.
5. கடவுளின் படைப்புகள் யாவும் அவருக்கே.......................................
6. கடவுள்..................................ஆள்கிறார்.

---

இக் கடமைகளைப் பெற்றோர் சரிவர நிறைவேற்றுவதற்கு அவர்கள் முதல்முதல் அவைகளைப்பற்றி நன்றாக அறிந்திருத்தல் வேண்டும். அடுத்தபடியாக, அவர்கள் தங்களை நன்றாக ஆயத்தப்படுத்த வேண்டும். இதற்கு உதவியாக, பங்குக் குரவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அப்போஸ்தல பணியாளர் பெற்றோரையும் குடும்பத்தின் மற்ற அங்கத்தவர்களையும் அவர்கள் இல்லத்தில் தரிசித்து, அவர்கள் குழந்தைகளின் ஞானஸ்நானத் திருச்சடங்கில் பயனுள்ள முறையில் பங்கு கொள்வதற்கு அவசியமான அறிவுரைகள், பயிற்சிகள், உதவிகள் ஆகியவற்றை அளிக்க வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## புனித லூக்காஸ் சுவிசேசம்

(ஊ) உவமைகள் மூலம் போதித்தல்.

## (அருட்திரு. R. S. லோப்பு அடிகள்)

தம்மைப் பின்செல்ல விரும்புகிறவர்களின் தகைமைகளை எடுத்துக்கூறின இயேசு அவர்களுக்கு இதயத்தில் **மாற்றம்** (Metanoia) அத்தியாவசியம் என்பதை எடுத்துரைக்கின்றார். இப் புதிய படிப்பினையைக் கேள்வியுற்ற **ஆயக்காரரும், பாவிகளும்** அவரை அணுகிய வண்ணமாக இருந்தனர். ஆனால் பரிசேயரும், மறைநூல் வல்லுநரும் இதைக் கண்ணுற்று தங்களுள் முணுமுணுத்தனர்; கிறீஸ்துவை மனதார வெறுத்தனர். இப்படியான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, பாவிகள் மட்டில் கடவுளின் அளவு கடந்த இரக்கத்தை, மனப்பான்மையை மக்களுக்கு இயேசு எடுத்துரைத்ததை, லூக்காஸ் கீழ் வரும் மூன்று உவமைகள் மூலம் தெளிவாகக் கூறுகின்றார்.

''ஆயக்காரர்'' என்றால் யார்? இவர்கள் யூதமக்களிடம் குறித்த அளவுக்கு அதிகமாக வரி எடுத்து, உரோமைச் சக்கரவர்த்திக்கு ஒரு பகுதியைக் கொடுத்து மிகுதியைத் தாங்களே எடுத்துக் கொள்ளும் யூதர்கள். இவ் அலுவலை இவர்கள் நன்கு செய்ய, உரோமர் உதவி செய்தனர். ''பாவிகள்'' என்றால் யார்? மோசேஸ் சட்டத்தை அனுசரியாதவர்கள்; யூத வெளிக்கிருத்தியங்களைச் சரிவரக் கடைப் பிடிக்காதவர்கள்; சன்மார்க்க வாழ்க்கை வாழாதவர்கள்; கெளரவமில்லாத தொழில் செய்பவர்கள்; இவர்கள் அனைவரும் பாவிகள் என்றழைக்கப்பட்டனர்.

இம் மூன்று உவமைகளையும் **''இரக்கத்தின் உவமைகள்''** அல்லது **''மகிழ்ச்சியின் நற்செய்தி''** என்றும் அழைக்கலாம். பாவிகள் மட்டில் பரலோக தந்தையின் அளவில்லாத இரக்கப் பெருக்கத்தையும், பாவிகள் மனந்திரும்பும் பொழுது பரலோகத்தில் உண்டாகும் அக்களிப்பையும், இவ் உவமைகள் வாயிலாக இயேசு எடுத்தியம்புகிறார். ''நீதிமான்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்'' என்று ஆண்டவர் கூறினார்.

### காணாமற்போன ஆடு 15, 1-7

ஒரு நல்ல ஆயன் தன் ஆடுகள் ஒவ்வொன்றையும் தனித் தனியாக நேசிக்கிறான். எனவே, காணாமற்போன ஒரு ஆட்டின் மீது அவனுக்கு அவ்வளவு கவலையும் கரிசனையும். காணாமற்போன ஆட்டைத் தேடிப் போகும் போது, அவனால் நேசிக்கப்படும் மற்றைய தொண்ணூற்றொன்பது ஆடுகளைப் பற்றிய கவலையில்லாமல் போவதில்லை. அவற்றைப் பாதுகாப்பான இடத்தில் விட்டுவிட்டு, காணாமற் போனதைத் தேடிப் போகிறான். கண்டு பிடித்த பின்பு, அதைத் தோளிற் சுமந்து, தன் வீடு கொண்டுவந்து, அயலவரை அழைத்து மகிழ்கின்றான்.

இயேசு, நல்ல ஆயன், இழந்த ஒரு ஆத்துமத்தைத் தேடிப் போவதைக் கண்ட பரிசேயர், மறைநூல் அறிஞர் அவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார்களில்லை. காணாமற் போன ஒரு ஆட்டைக் கண்டுபிடிக்க, பாதுகாப்பாகக் கையிலிருக்கும் தொண்ணூற்றொன்பது ஆடுகளை விட்டுச்செல்வது, மனித வாழ்க்கையில் நடவாத ஒரு காரியம் போல் பலருக்குத் தோன்றலாம். ஆனால், கடவுளைப் பொறுத்தமட்டில், இறந்து போன ஒரு ஆத்துமத்தைக் கொண்டுவர கடவுள் இவ்விதம் நடந்து கொள்ளுவார். மனித பாவனைக்கும்

(11ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்......

*(10ம் பக்கத் தொடர்ச்சி)*

தெய்வச் செயலுக்குமுள்ள பாரதூரமான வித்தியாசமிதுவே. பழைய ஏற்பாட்டில், கடவுளை நல்ல ஆயனாக அழைத்ததை ஒவ்வொரு யூதனுமறிவான். புதிய ஏற்பாட்டில் இயேசு, ''நானே நல்ல ஆயன்'' என்று கூறியதை இவர்கள் அறியார் போலும்!

காணாமற்போன பணம்
15, 8–10.

மேற்கூறிய உவமையில் கூறப்பட்ட அதே கருத்தை வேறு விதமாக, தொடர்ந்து இங்கேயும் லூக்காஸ் கூறுகின்றார். அங்கே ஆயன் நூறு ஆடுகளில் ஒன்றை இழந்தான். இங்கே, பத்தில் ஒரு வெள்ளிக் காசை ஒரு மாது இழந்தாள். இது ஒரு வேலையாளின் ஒரு நாள் சம்பளம். எனவே காணாமற்போன வெள்ளிக்காசைத் தேடிக் கண்டுபிடிப்பது ஒரு ஏழைப் பெண்ணின் வழக்கம். ஆனால், அதைக் கண்டுபிடித்ததும், சந்தோஷ மிகுதியால் அயலவரையும் தோழியரையும் அழைத்து மகிழ்ந்து கொண்டாடுவது பொதுவாக நடக்கிற ஒரு சம்பவம் என்று கூறுவதற்கில்லை.

பாவிகள், ஆயக்காரர், தள்ளி வைக்கப்பட்டவர்கள் மட்டில், இயேசு எவ்வளவு அன்பும் அக்கறையும் காட்டுகிறார் என்றும், திரும்பவும் இவர்களை நல்வழிப்படுத்த விரும்புகிறார் என்றும் இந்த உவமைகள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. ஒருவரிடமுள்ள அருமையான ஒரு பொருளை இழக்குப்போது மாபெரும் துன்பம் ஏற்படுவதும், அப்பொருள் திரும்பக் கிடைக்கும்போது அளவில்லாத ஆனந்தம் உண்டாகுவதும் வாழ்க்கையில் ஏற்படும் ஒரு சம்பவம் அல்லவா?

காணாமற்போன மகன்
15, 11–32.

இதை ஊதாரியின் உவமை என்றும் லூக்காஸ் கூறுகின்றார். இவ் உவமை வேறு எந்த சுவிசேசுகராலும் கூறப்படவில்லை. மனந்திரும்பும் எந்தப் பெரிய பாவிக்கும் கடவுளின் **அளைகடந்த இரக்கமும், அன்பும், மன்னிப்பும்** உண்டு என்ற கருத்தைத் தழுவி லூக்காஸ் இந்த உவமையை வர்ணித்துள்ளார்.

கதையில் முக்கியமாக மூன்று பாத்திரங்கள் வருகிறார்கள். இரக்கம், அன்பு, பண்பு உருவான **தந்தை** (கடவுள்), ''நீதிமான்கள்'' சார்பாக **மூத்தமகன்** (யூதமக்கள், விசேசமாக பரிசேயர்), ஒரு யூதமகன் விழக்கூடாத படுகுழியில் விழுந்து எழுந்து வரும் **இளையமகன்** (பாவி - ஒவ்வொரு மனிதனும்)

மூன்று காட்சிகளைக் கொண்டதாக இந்த நாடகம் அமைகின்றது. ஊதாரிப் பிள்ளை, தந்தையின் மகிழ்ச்சிகரமான அமோக வரவேற்பு, மூத்தமகனின் முறைப்பாடு. ஊதாரிப்பிள்ளையின் பாவத்தை அல்ல, அவனின் பரிதாப நிலையை முதலாவது காட்சி சித்தரிக்கின்றது. ஒரு யூதன் கனவிலும் செய்ய நினைக்க முடியாத பன்றி மேய்க்கும் வேலையை அவன் செய்து, தனக்கும், தன் சமூகத்துக்கும் இழிவைத் தேடிக் கொண்டான். (யூதர் பன்றி உண்பதில்லை. எனவே அதை வளர்ப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது) மகன் தந்தையின் வீடு திரும்பி வரும் பொழுது அவனுக்கிருந்த எண்ணம் அவ்வளவு உன்னதமானதொன்று அல்ல. தந்தை வீட்டில் அடிமையாக வேலை செய்து வாழ்வதே ஒரு சுலபமான வாழ்க்கை என்ற எண்ணம்தான் அவனைத் தந்தையின் வீட்டிற்குத் திருப்பிக் கொண்டுவந்தது.

இளைய மகனுக்குத் தந்தையைப் பற்றிய கவலை இல்லை. மகனைப் பற்றிய நினைவு தந்தைக்கு ஒரு கணமேனும் அகலவில்லை. ஆகவேதான் தூரவரும் பொழுதே தந்தை மகனைக் கண்டுவிட்டார். ஓடோடிச் சென்று, முத்தமிட்டு, முதல்தரமான ஆடை அணிவித்து, கைக்கு மோதிரம், காலுக்கு செருப்பு, கொழுத்த கன்று அடித்து விருந்து கொடுத்தார். மகன் செய்த குற்றம் பற்றித் தந்தை எதுவும் கூறவில்லை. இவைகளை இரண்டாம் காட்சி விபரிக்கின்றது.

மூத்தமகனுக்கும் தந்தைக்குமிடையே நடக்கும் சம்பாஷணையை மூன்றாம் காட்சி எடுத்துரைக்கின்றது. வயலிலிருந்து வந்து, வீட்டில் நடக்கும் கொண்டாட்டத்தைக் கேள்வியுற்ற மூத்த மகன், வீட்டினுள் செல

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மனம் நொந்தால்......

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை அடக்கப்பட்டிருந்த இதய தாகம் புடைத்தெழுந்தது அவள் அழைத்தாள். நான் அமர்ந்தேன். உபசரித்தாள். உவகை கொண்டேன். அவளிடம் காதலை மட்டுமல்ல என் அன்னையின் அன்பை, தந்தையின் தயவை, உற்றாரின் உறவைக் கண்டேன். களித்தது உள்ளம். அது தவறா? ஆம் அவளைக் காதலித்தேன்; அவள் ஆதரித்தாள். ஆனால்........ ஆனால் என்ன? அவள் பத்திரிகை விற்பவனின் தங்கை! நான் அப்பத்திரிகையின் உயிர் நாடி, ஆசிரியர்!! காதலுக்குப் பேதமில்லை. அது வளர்ந்தது, படர்ந்து மலர்ந்தது. அவளை கேவலம், சமயல் யந்திரமாகவோ, இல்லை, பிள்ளை பெறும் கருவியாகவோ நினைக்கவில்லை. ஆனால், அவளை என் தெய்வமாகவே எண்ணினேன். அந்த எண்ணத்தை ஆசித்தேன், போஷித்தேன்.

போன வருடம் பங்குனி மாதம் பாலைதீவுக்குப் போக ஆசித்தாள். எனக்கு தலைக்கு மேல் வேலை. அவளை மட்டும் அனுப்பிவைத்தேன் அண்ணனுடன். அண்ணனும் தங்கையும் போனார்கள்.

அவள் கடல் அலையுடன் போராடிய கடைசி நிமிடத்தில் நான் கொசு வலையுடன் போராடினேன் தூங்குவதற்கு. உயிர் பிரியும் அந்த இறுதி நேரத்தில், என்னை எத்தனை தடவை அபயக்குரலில் அழைத்திருப்பாள், என் சாளி! சீ........ எவ்வளவு கசப்பான நினைவு!!

நீங்களே சொல்லுங்கள், நான் இனி உலகில் ஏன் இருக்க வேண்டும்? யாருக்காக வாழ வேண்டும்? எப்படி வாழமுடியும்??

ஆம், தற்கொலை செய்ய முனைந்தேன். என்னைத் தடுத்தது எனது மதப்பற்று. ''பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிக்கலாமா?'' மறுநாள் பத்திரிகையில் வந்த செய்தி!

பாலைதீவு படகு விபத்தில் இறந்தவர்கள் விபரம்.

சாளட் மேரி – இடம்: கொச்சிக்கடை, வயது: 20. குறிப்பு: 4 மாத கர்ப்பவதி!!!

என்ன! என் சாளி கர்ப்பவதியா? என்னை அறியாமலா? உலகம் சுற்றியது. இனியும் நான் இந்த உலகத்தில் ஏன் இருக்கவேண்டும். ''சுவாமி நீங்கள்தான் என்னை ஏதேதோ சொல்லி உலகத்தில் வைத்திருக்கிறீர்கள். கவலையை மறக்க நகைச்சுவை நன்று என்றீர்கள். அதனால்தான் நகைச்சுவையால் கவலையை மறக்க முயல்கிறேன். இது எங்கே தெரியப் போகிறது றெஜீனாவுக்கு – மணிக்கு, சமூகத்திற்கு.

ஏக்கத்துடன் குருவைப் பார்க்கிறேன். தாக்கத்துடன் கூறுகிறார்:

தம்பி! தேவசித்தம் எமக்குப் புரிவதில்லை. நாம் அதை உணராமல் அவசரப்பட்டு விடுகிறோம். சிறிது பொறுமையாக இருந்தால் எமக்குத் தேவசித்தம் புரிந்து விடும். ஒரு விபச்சாரிக்கு உன்னை கணவனாக்கி வாழ்நாள் எல்லாம் உன்னை சித்திரவதை செய்யக் கூடாது என்பதற்காக அந்தச் சாளியை கொன்றுவிட்டார்.

குறுக்கிடுகிறேன், நான்; அவள் சாளி அல்ல சுவாமி, கூளி! கண்ணீர் விட்ட நண்பர்கள் சிரிக்கிறார்கள். அப்படியானால் இனிமேல்........ சீ, காதல் என்பது படித்து முடித்துவிட்ட காவியம். என்னைப் பொறுத்த மட்டில் எதிர்காலம் ஏழையின் வாழ்வு ''வெரி வெரி சிம்பிள்''

(யாவும் கற்பனை)

## மாணவர் மன்றம்............

[11ம் பக்கத் தொடர்ச்சி]

லவே விரும்பவில்லை. தந்தையின் அன்புக் கோரிக்கையையும் நிராகரித்து விட்டான். ''மகனே, நீ என்றும் என்னுடன இருக்கிறாய், என்னுடையதெல்லாம் உன்னுடையதே, நாம் விருந்தாடி மகிழ்வது முறையே'' என்று தந்தை தன் மூத்த மகனுக்கு ஆறுதல் கூறினார்.

உலக வழக்கில் ஒரு தந்தை இவ்விதம் நடந்து கொள்ளுவாரா? என்ற கேள்வி சிலருக்கு மனதில் எழலாம். உவமையில் வரும் தந்தை, நம் பரலோக தந்தையை. இரக்கம் நிறைந்த தந்தையை (Father of Mercies) எமக்கு மங்கலாக எடுத்துக் காட்டுகின்றார். உவமையில் தந்தை மகனைத் தேடிப் போகவில்லை; ஏனெனில் அவன் எங்கிருக்கிறனென்பது அவருக்குத் தெரியாது. எல்லோரையும், எல்லாவற்றையும் அறியும் எம் பரலோக தந்தை பாவியைத் தேடிப் போகின்றார். அவன் மனந்திரும்புவதற்கு வேண்டிய அருளையும் அன்பையும் அவனுக்கு அளிக்கின்றார். மனந்திரும்பி வரும்வரை பாவியைப் பின் தொடர்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இளைஞர் இல்லம்

# இறைவனுடன் உறவு

**க. வே. இராயப்பு கி. இ. தூ.**
**மட்டக்களப்பு.**

கரும்பு நோக்கும் எறும்புபோல்
கனிச் சோலை நோக்கும் புட்கள்போல்
பள்ளம் நோக்கும் வெள்ளம்போல்
உன் உள்ளம் நோக்கும் இறைவனுடன்
உறவு நோக்கி விரைவினுடன்
ஓடிடுமோ உன் இள மனதும்?

நினைத்ததை நடத்தி முடிக்கின்ற நினைப்பில், நெஞ்சையே நிமிர்த்தி நிற்கின்ற இளைஞரே, உங்களது நோக்கு என்றும் நிறைவுற இறையருள் வேண்டிச் செபிக்கின்றேன் இன்று ஆம், செபம், செபம். நம் அன்றாட வாழ்வில் நாம் எடுக்கின்ற நோக்கைத் தொடுக்கின்றபோது ஏற்படும் இன்னல், இக்கட்டுத் தன்னை சாடி முறியடிக்க, கரைந்துறைந்து, வினை புரிந்து, திசை மாற்றும் வன்மனப் பேயின் வலையறுக்க, புனிதமாம் வாழ்வின் இறுதியில் என்றும் விருததைப் பெற்று விண்ணுலகப் புனிதர் வரிசையில் நின்று முடியதைப் பெற்று மூவுலக வேந்தன் முன்னுலமர, வழியதை வகுப்பது செபம் என்று சொன்னால் மிகையாகாது. உண்மையும் அதுவே யாகும்.

இரண்டு உள்ளங்கள் ஒன்றோடொன்று இணைந்து பின்னிப் பிணைக்கப்பட்டு உரையாடும் உறவே அன்பின் அடையாளம். அப்படியாயின் மாசற்ற தன்னை பாசமற்ற பகைவர் மோசமாய் நடத்திச் சாகடித்த போதும் ''தந்தாய் இவர்களை மன்னியும்'' என்றுரைத்து, உலகையே மீட்க உயிர் நீத்து, வழிக்குணவாய் அமுதமாக மாந்தரிடம் உயிர் வாழும் உருகும் அன்பின் உறைவிடமாம் இறைவனோடு உளம் ஒன்றி உரையாடின், அது இக வாழ்விற்கு மட்டுமன்று புகவிருக்கும் மறு வாழ்விற்கும் நல்வழி காட்டுமே. இளம் உள்ளமே இதை எண்ணிப் பார்த்ததும் உண்டா? இல்லையேல் இறையோடு உன் இதயம் உறவாட உதவும் புனிதர்கள் வாழ்க்கை குறிப்பதை கூறும் அறிஞராம் ஏயேல் கருத்தை உந்தன் விழிக்கு நான் விருந்தளிக்கின்றேன்.

விழி வழியே உளம் புகும் அவ்வுரைகளை அறிவெனும் உரை கல்லால் உரைத்து, சிந்தனைத் துலாக்காலால் நிறுத்து, சரியா தப்பா எனப் பார்த்து, சரியானதை ஒப்ப, ஒப்பியதை ஓம்ப மரியென்னும் மலராள் நிறையருள் பொழிவாளாக. இதோ, என் உயிர் சோதரமே, உன் விழிக்கு வேலைகொடு.

''செபம் என்பது ஆன்மா வானுலகை நோக்கிப் பறக்க உதவும் ஒரு இறக்கை. தியானம் என்பது இறைவனைக் காண உதவும் கண்கள்.'' - புனித ''அம்புறோஸ். செபம் என்னும் கவசத்தை அணிபவர் பாவத்திற்கு இரையாக மாட்டார்கள். ஆனால், அவர்கள் உலகில் நின்று விடுதலை பெற்று வான் வீட்டை நாடுவார்கள்.'' - புனித கிறிசோஸ்தம் அருளப்பர். ''மட்டுத் திட்டமாக வாழ, சிந்தனையைச் சிதைக்க, தற்பெருமையைத் தவிர்க்க, பொறுமையைப் பொசுக்க, பழி வாங்கும் பகை உணர்ச்சியைப் பகைக்க, பரிசுத்த ஆவியை ஆன்மாவில் அழைக்க, மனிதனை விண்ணகம் நோக்கி உயர்த்த உதவுவது செபம்,'' - புனித எபிரேம். ''அகிலம் உண்டானது முதல் எடுத்த விழாக்களெல்லாம் கொடுத்த உவகையைவிட ஒரு மணி நேரம் இறைவனை நோக்கி செபித்தால் அதிக இன்பம் உண்டாகிறது,'' - பெய்லி.

செபத்தின் தொடர்பு நம் அன்றாட வாழ்வில் எத்தகைய இடத்தைப் பெறுகின்றதென்றும், எத்தகைய இடத்தைப் பெற வேண்டும் என்றும், புனிதர்கள் கூற்றால் கூறியது உனக்கு தெளிவதைத் தருமே. அது மட்டுமா, செபத்தின் மேன்மையை அறியா அப்போஸ்தலர் ஆண்டவர் இயேசுவை அண்டியே கேட்டிட, அவர் கூறும் செபத்தை நற்செய்தி மூலம், நன்றாக நீயும் படித்திருப்பாயே. அப்படியாயின் உன் இக வாழ்வில் இறையோடு உரையாடல் எத்தகைய இடத்தை பெறுகின்றது. உன் நினைவலைகள்

(16ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வற்றாத கடல்நோக்கி வழி சமைத்து............

1. கடந்துவிட்ட ஆண்டும்தான்
கண்டோம் நாம் பாஸ்குவிழா
திரும்பவும்தான் வந்தது
மாற்றம் நாம் கண்டதென்ன?
ஊரடங்கு உத்தரவால்
உறங்கியதைச் சொல்லவில்லை
மக்கள் தம் வாழ்க்கையிலே
ஏற்பட்ட மாற்றமென்ன?

2. அன்றும்தான் வறுமையெம்மை
வாட்டி வதைக்கக் கண்டோம்
இன்று வறுமையெங்கே
அழிந்து ஒழிந்ததுவா?
அன்று புத்தாடை
இல்லாதோர் எத்தனைபேர்!
இன்று அவர்க்காடை
எல்லார்க்கும் கிடைத்திட்டா?
காலம் தன்பாட்டில்
ஓடிக்கொண்டிருக்க
வாழ்க்கையிலே சிக்கல்கள்
மலிந்து நிறைகிறதே!

3. ஒன்றுக்கு இரண்டாக
வசதி நிறைந்தோரும்
மாற்றார் தம் துயரமிகு
வாழ்க்கையதை எண்ணாத
நாட்கள் கழியாத
நாள்வரைக்கும் எங்கணுமே
வறுமை அழிந்திடவோ
ஒழிந்திடவோ வழியுண்டா;

4. ''மாற்றார்தம் உடமைகளை
மனதாலும் தீண்டாதே''
பத்திலொரு கற்பனையாய்
இறைவன் தந்த இதை
எண்ணிப் பார்க்கவும்தான்
வழியின்றி இதயத்தை
வறுமையெனும் கருமேகம்
மூடி மறைத்திருக்க
திருட்டுகளும் ஒழிவதெங்கே
களங்கமிலா வாழ்வுமெங்கே!

5. ''ஞாயிறுநாள் கடன்திருநாள்
என்றதொரு கட்டளையும்
இல்லையெனில் யாமெல்லாம்
ஏனையா கோவிற்புறம்
எட்டித்தான் பார்ப்போமா?''
என்று சொலும் ''விசுவாசத்
தூண்கள்'' நிறை இந்நாளில்
வறுமையதும் பேயாட்டம்
ஆடிட்டால் வாழ்க்கையிலே
இறைவனுக்கு இடமெங்கே?

6. எமைச்சூழ பிரச்சினைகள்
இத்தனையும் இருக்கையிலே
கண்காணா ஆன்மாவைச்
சிந்திக்க இடமுண்டா?
வளமுடனே ஆன்மாவும்
வளர்வதென்றால் வாழ்க்கையிலே;
வறுமையெனும் கொடுங்கோலன்
வற்றாத கடலுள்ளே
தஞ்சம் புக இன்றே நாம்
வழி சமைப்போம் எழுந்திடுவீர்!

— கல்முனை அயில் —

# எமது மேற்றிராசனத்திற்கு ஒரு புதிய குரவர்

சென்ற சித்திரைமாதம் 18ம் திகதி எமது மேற்றிராணியார் மட்டக்களப்பு புனித மரியாள் உடன் மேற்றிராசன தேவாலயத்தில் காலைத் திருப்பலியின்போது வண. W.D. மத்தியூ அவர்களுக்கு குருப்பட்டம் வழங்கினார்.

இவர் 1921ம் ஆண்டு ஆனிமாதம் 1ம் திகதி குருநாகலில் பிறந்தவர். தேவ அழைத்தலைத் தனது 45ம் வயதிற்தான் உறுதிப்படுத்தி தொடர முடிந்தது அதுவரை இலங்கை அரசாங்க இராணுவப் பகுதியில் கடமையாற்றினார். ஆரம்பத்தில் கார்மெல் சபையில் சேர்ந்தார். பின்னர் எமது மேற்றிராசனத்திற் சேர்ந்தார். தற்பொழுது இவரது பெற்றோர் பொலநறுவையில் குடியேறியுள்ளார்கள். சித்திரையில் நிகழ்ந்த கலகத்தின் மத்தியில் குருப்பட்டம் பெற்றமையால் இவரது இனபந்துக்கள் இந்த நன்னாளில் பங்கு கொள்ள முடியவில்லை.

முதல் அப்போஸ்தல பணியாக இவர் மூதூர் பங்கின் உதவிக்குரவராக நியமிக்கப்பட்டுள்ளார். அன்னார் தனது வாழ்க்கையின் அனுபவமிக்க நாட்களை கிறிஸ்துவின் சேவையில் செலவிட முன் வந்தமையிட்டு மிக்க மகிழ்ச்சியடைவதுடன், அவை வளமான சேவை நாட்களாக அமையவேண்டுமென்று ''தொண்டன்'' நல்லாசி கூறுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாதர் மன்றம்

## கடவுளை நம்பினோர் கெடுவதில்லை

(ச. யோ. நீக்கிலாஸ் – மிருசுவில்)

"என் மகன் என்னை விட்டு, வீட்டை விட்டு, ஊரை விட்டுச் சென்று விட்டானே! மகன் இருக்கிறானோ அன்றேல் கயவர்களால் வஞ்சிக்கப்பட்டானோ என்னவோ!! வீட்டின் குறைகளை நிவர்த்திசெய்து மற்றையோர்க்கு குடும்பக் கஷ்டத்தை காட்டாமல் வாழ வேண்டியவர், குடிக்கும் கூட்டத்தோடு தெரு வீதிகளில் மானமற்றுத் திரிகின்றாரே!!" இது மனைவி அருளம்மாவின் புலம்பல்.

நாளை பெரிய வெள்ளி. "தன் புருஷனை மனம் திருப்பித்தரும்படி கடவுளிடம் இரந்தும், கடவுள் மௌனமாக இருக்கிறாரே", எனத் தனக்குள்ளே வருந்துவாள். பாவம், அவளும் என்ன செய்வாள்? மகன் ரஞ்சித் வீட்டை விட்டு வெளியேறி இரு வருடங்களாகி விட்டன. குடி குடியைக் கெடுக்கும் என்பார்களே. இக்குடும்பம் இதற்கு நல்ல எடுத்துக் காட்டாக அமைந்தது.

அன்று உயிர்த்த ஞாயிறு. அருளம்மாவும் மகன் ரஞ்சித்தும் கோவிலுக்குப் போய் ஆண்டவனின் திருப்பாடுகளின் நினைவுப் பலியை முடித்துக் கொண்டு வெளியில் வரும் போது யாரோ ஒருவர் மது மயக்கத்தில் ஆடிக் கொண்டு ரோட்டில் நிற்பவர்களுக்கு ஏதோ மதுவுக்கு மன்னனாக நிற்பதை ரஞ்சித் கண்டான்.

மற்றவர்களுக்கு வேடிக்கையாக நிற்கும் மனிதன் யாரென ரஞ்சித் பார்க்கப் போன போது மலைத்தே போனான். அது வேறு யாருமல்ல. அவனின் தகப்பன் சூசைப்பிள்ளை தான். தம் குடும்பக் கௌரவம் நடுச் சந்தியில் பறி போகின்றதே என ஆத்திரம் கொண்டான் ரஞ்சித். சிறிது நேரத்தின் பின் ஒரு மாதிரியாக தகப்பனைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு போனான். வீட்டுப் படலையை தாண்டிய ரஞ்சித் சூசைப்பிள்ளையிடம், "அப்பா, இக் குடியை விட்டு விடுங்கள்; இல்லையேல் நான் உங்களின் வீட்டில் ஒரு பொழுதும் இருக்கமாட்டேன்" என்றான். ஆனால் சூசைப்பிள்ளையோ "அடே, நீயா எனக்கு புத்தி புகட்டுபவன். மதுபானமே என் கடவுள். நான் இக் கடவுளை கைவிடேன்" என்றான். கோபத்தாலும் துன்பத்தாலும் நிறைந்த ரஞ்சித் வீட்டைவிட்டு வெளியேறினான். போனவன் இன்னமும் வீடு திரும்பவில்லை.

அருளம்மா இப்பொழுது கண்ணீரும் கம்பலையுமாக கோவிலுக்குள் இருந்து இறைவனின் பாதத்தில் தன் குடும்பம் சந்தோஷமாக வாழ வழிவகுத்துத்தரும்படி இரந்தாள். அவள் இரு வருடங்களாகக் கேட்பது இதுவே தான். அருளம்மா இம் மன்றாட்டைக் கைவிடவில்லை. வீடுநோக்கிச்சென்று தன் வீட்டுக் கருமங்களை முடித்துக் கொண்டு இருக்கும் போது சூசைப்பிள்ளை இல்லத்துக்கு வந்தான்.

வந்தவன் இனிமேல் நான் குடிப்பதில்லை என இறைவனுக்குச் சத்தியம் செய்து கொண்டேன் என்றான். அருளம்மா மகிழ்ச்சியின் மேல் மகிழ்ச்சி கொண்டாள். தன் புருஷனை திருத்திவிட்ட கடவுளுக்கு நன்றி கூறினாள். சூசைப்பிள்ளைக்கு தன் மகனின் எண்ணம் வரவே, தன் மகனை எங்கே தேடியும் பயனில்லை. கடவுளே துணை என கோவிலை நாடினர். கிறீஸ்துநாதரின் நினைவுக் கிருத்தியங்கள் கோவிலில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பின் இருவருமாக திவ்விய நற்கருணை பெறலாயினர்.

உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை எல்லோரும் கோவிலுக்குப் போய் பூசை காணலாயினர். தன் மகன் பிரிந்து இருவருடங்கள் பூர்த்தியானதை நினைந்து வருந்திக் கொண்டிருந்தாள் அருளம்மா. அவளைக் கண்டு உருகாதவர்களில்லை. பூசை முடிந்து வெளியில் வந்த போது, ரோட்டில் தபால்காரன் கடிதம் ஒன்றை கொடுத்துவிட்டுப் போனான். அவசரம் அவசரமாக உடைத்த அருளம்மா தன் மகனின் கடிதம் என்பதை உணர்ந்தாள். அதில் "நான் இப்பொழுது அரசாங்க விமானச் சேவையிலிருந்து கடமையாற்றி, மேல் படிப்

(16ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இளைஞர் இல்லம்............

(13ம் பக்கத் தொடர்ச்சி)

எழும்பட்டும். அவை என் நெஞ்சம் பூரிக்கும் செய்திதனையே வாரி வழங்கட்டும்.

திருமறையின் உறுப்புகள் எனத் திகழ்ந்து வரும் தம்பியரே, தங்கையரே, மூலத்தீவினையின் முடிச்சதையே அறுக்கவென்று, நரவுருவம் தாங்கி வந்த நாயகனுர் இயேசு அன்று, மேனியிலே செங்குருதி முத்தெனப் பூத்திருக்க, பூங்காவன நிலத்தில் வீழ்ந்து அவர் வேண்டியதும் செபம் அல்லவா. இவ்வுலகமே கொடுக்காத அமைதியை ஆண்டவர் இயேசுவுக்கு அளித்ததிந்த செபம் அல்லவா. உருவான காலந்தொட்டு உலகை விட்டு மறைவான காலம் வரை கன்னிமரி கரம் குவித்து வேண்டியதும் செபம் அல்லவா. வழிகாட்டும் ஒளியென மரியாளே இருக்கையிலே விழி திறந்தும் வழி தவறி விழலாமோ?

நாற்பது நாட்கள் வனந்தரத்தே நோன்பிருந்த இயேசுவையே சோதித்திட வந்த சாத்தான் பாவ வழி வாழும் உன்னை பரமனுடன் சேர்ந்து வாழ விட்டுவிட்டுச் சும்மா இருப்பானே சோம்பேறியாய்? கண்ணுடியைக் கறையான் அரிக்க முற்படுமாயின் கடதாசியின் நிலை எனவாயிருக்கும்.

உன் சிந்தனையைத் தீட்டி விடு. செப வழியே உன் வாழ்வைத் திருப்பி விடு. கூடிச் செபிக்க நீ கற்றுவிடு. இறை மகனுர் வார்த்தையை நீ கேட்டுவிடு. ''மண்ணுலகில் உங்களில் இருவர் தாங்கள் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் அது விண்ணுலகில் உள்ள என் தந்தையால் அவர்களுக்கு அருளப்படும். என் பெயரால் இரண்டு மூன்று பேர் எங்கே கூடியிருப்பார்களோ அங்கே அவர்கள் நடுவில் நானிருக்கிறேன்'' (மத்தேயு 18-19,20). எனவே, செபமே உங்கள் வாழ்வின் மையமாகட்டும். மங்கையர் குல விளக்கே, பாடும் பறவை இனம் பரமன் புகழ் பாடி மகிழ்கையிலே, ஆடும் மயிலினமும் ஆண்டவனைப் ஆடிப் புகழ்கையிலே, கூவும் குயிலினமும் குணாளனைக் கூவி அழைக்கையிலே, மலர்ந்தாடும் மலர்களெல்லாம் மாதவனை மணம் கமழச் செய்கையிலே, மானிடனாய்ப் பிறந்த நீயோ, மாபரனை எப்படிப் புகழ்ந்துள்ளாய்? பகுத்தறிவின் சிகரமே நீ உண்ணும்போதும் உடுத்தும்போதும் உனை மறந்து உறங்கும்போதும், எண்ணியிங்கு செயல் பல தொடங்கும் போதும், உன்னை உருவாக்கிய உருவமில்லா உத்தமனை உள்ளத்தால் எண்ணிடு. இதய நன்றி கூறிவிடு. இசையெனும் பண்ணால் பாடிடு

நரம்பில்லா நாவால் வரம்பில்லா வார்த்தைகளை அள்ளி அளிக்கின்ற மாந்தரிடம் நாளிகை பலவற்றை நாசமாக்கும் உனக்கு, ஒருநாள் உருவாகி மறுநாள் உருக்குலையும் இயற்கையெழிலில் இதயத்தை ஈடுவைக்கும் உனக்கு, மறுக்கவோ, மறைக்கவோ, அளக்கவோ, உரைக்கவோ முடியாத அன்புக் களஞ்சியம் ஆன்மாவின் ஆனந்தம் உண்டு. இன்பத்தின் ஊறணியாம் இறையுடன் உறவாட ஒரு நிமிட நேரம் ஒதுக்காது விட்டாயே. அந்தோ, நீ மறந்ததுபோல் அவர் உன்னை மறந்திருந்தால் உன் நிலை என்னவாகும்?

விநாடிக்கு விநாடி விழியென உன்னைக் காத்திடும் இறையுடன் உறவு கொள்ள விரைவுடன் ஒதுக்கிடு ஒருவிநாடி. செபித்திடு செபமாய் ஒன்று, பாடிடு பண்ணாய் ஒன்று, இனித்திடும் வாழ்க்கை நன்று.

''கற்றதனாலய பயன் என் கொல் வாலறிவான் நற்றாள் தொழாஅர் எனின்.'' ★

---

## மாதர் மன்றம்......

(15ம் பக்கத் தொடர்ச்சி)

புக்காக அரசாங்கத்தால் இந்தியாவுக்கு அனுப்பப்படுகின்றேன். என் குற்றங்களை மன்னித்து, என்னை ஓர் உதாரிப்பிள்ளையாக நினைத்துக் கொள்ளுங்கள்'' என்பதே. கடவுளை நம்பினோர் கைவிடப்பட மாட்டார்கள்! அருளம்மா கடவுளின் இரக்கத்திற்கு நன்றி செலுத்தினுள்.

முற்றும். (யாவும் கற்பனை)

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S.S.J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1–6–71ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media